24



அம்மா எனக்கு போதி மரம்

இன்று, நான் என்பது, முழுவதும் என் பெற்றோரின் ஆக்கமே. அதிலும், அம்மா! ஹேமா எனும் வீரியப் பெயர் கொண்டவள். என்னை ஆத்தவளும் அவளே, வார்த்தவளும் அவளே, செதுக்கியவளும் அவளே...

ஒருவரது பரிணாம வளர்ச்சியில் மரபியலின் பங்கு என்ன என்பது இன்று நாம் அனைவரும் அறிந்த ஒன்று. என்னுடைய ஒவ்வொரு எண்ணத்திலும், சிந்திக்கும் விதத்திலும், செயலிலும், வாழ்வின் பல்வேறு தருணங்களையும் எதிர்கொள்ளும் தன்மையிலும், நான் என் பெற்றோரையே காண்கிறேன். இத்தகைய பெரு வரத்துக்கு ஈடாய் ஒரு மகனால் என்ன கைம்மாறு செய்ய முடியும், அவர்களது நினைவுகளுக்கோர் ஆலயம் அமைப்பது தவிர?

ஆலயங்களிலேயே, சிறந்த ஆலயம், கல்விக்கூடமன்றோ ?!

அத்தகைய ஒரு சிறு முயற்சிதான், இன்று வளர்ந்து, தொடக்கக் கல்வி முதல், முதுகலைக் கல்விவரை அளிக்கும் ‘‘சிகே கல்விக் குழும’’மாக விரிந்து, படர்ந்துள்ளது. இந்த ஆக்கத்திலும், கருவாகவும், திருவாகவும், இருந்ததும் – அம்மாவே!

அதற்கு வித்திட்டதும், தீர்க்கதரிசியான எனது தந்தையே – சின்னி கிருஷ்ணன் என்ற, அந்த எல்லாம் வல்லவனின் பெயர் கொண்டவர்!

அவர்தான், முதன்முதலில், தான் ஒரு, தொடர் தொழில் முனைவராகும் முன்பு, பயிற்சிப் பள்ளி (tutorial institute) ஒன்றைத் தொடங்கி, வெற்றிகரமாக நடத்தி வந்தார். (ஆமாம், மேலெழுதிய வாக்கியத்தில் நீங்கள் காணும் முனைவர்' எனும் இந்த ஒரு சொல், எனது ஓர் அன்பு சிலேடையாகும் – இதில், விழைபவர் மற்றும் முனைவர் என்ற இரு சொற்களும் – அவற்றின் பொருளும் – அடக்கம். அவை இரண்டுமே அவருக்கு மிகவும் பொருத்தமானவை! அவர், தனது அறிவாற்றலால், விடாமுயற்சியால், படைப்பாற்றலால், ஒரு முனைவர்தான், ஒரு உன்னதமான சிந்தனையாளர்தான், செயலாளர்தான், என்பது எனது ஆழ்ந்த, உறுதியான துணிவு.)

அம்மா, எமது சொந்த ஊரான கடலூரில், முதன்முதலில், பாபா நர்சரி ஸ்கூல் என்ற பெயரில் சிறார்களுக்கான ஒரு பள்ளிக்கூடத்தை ஆரம்பித்தார்கள். அது இன்று ஆல் போல் வளர்ந்து, இடை நிலை, உயர்நிலை மற்றும் மேநிலை கல்வி வழங்கும், மூவாயிரத்துக்கும் மேற்பட்ட குழந்தைகள் மற்றும் மாணவ மாணவியர் கல்வி கற்கும் விளை நிலயமாய்த் திகழ்கின்றது.

கடலூரில் அன்று தொடங்கி, வளர்ந்த பாபா பள்ளியைப் பின்னர் ‘‘சிகே செயல்முறை கல்விப் பள்ளி’’ (CK SCHOOL OF PRACTICAL KNOWLEDGE) என்று, தந்தையார் திரு சின்னி கிருஷ்ணன் அவர்களது நினைவில், அவரது பெயரின் முதலெழுத்துக்களைக் கொண்டு, பெயர் மாற்றம் செய்தோம். பின்பு, இப்பள்ளியில், மாநிலக் கல்விமுறை (State Board) மட்டுமல்லாது, மத்தியக் கல்வி முறை (CBSE) கல்வியையும் அளிக்கத் தொடங்கினோம்.

அதன் பின் படிப்படியாக, மழலையர் பள்ளிகள், தொழில் கல்விக் கல்லூரி, ஆசிரியப் பயிற்சிக் கல்லூரி, என பல்வேறு வகைகள் மற்றும் நிலைகள் கொண்ட கல்விச்சாலைகளை தொடங்கி, இந்தப் புனிதப் பயணம், ஞான வேள்வி, நன்றியறிவித்தல் பணி, இன்றும் தொடர்கிறது.

இன்று, ஐயாயிரத்துக்கும் மேற்பட்டோர், இந்த கல்விச்சாலைகளில் தரமான மற்றும் தங்களின் சிந்தனையை, வாழ்வினை, மேம்படுத்தும் கல்வியையும், செயல்திறனையும் பெறுகின்றனர். சிகே என்கின்ற ஈரெழுத்துச் சொல் எமது ஒரு தாரக மந்திரமானது.

நாங்கள் விழையும், செய்யும், ஒவ்வொரு முயற்சிக்கும், தொழில் முனைவுக்கும், உந்துகோலாய், முதற்பெயராய், தலைப் பெயராகின்றது. எங்களின் தாய் நிறுவனமான கவின்கேர்' என்பதும் சிகே என்ற இரண்டெழுத்தின் ஒரு பன்மொழி விரிவாக்கம்தான்.

கவின்கேர் குழுமத்தின்கீழ், ''சின்னி'ஸ்'' மற்றும் ''ஹேமா'ஸ்'' என்கிற இரண்டு வர்த்தகப் பெயர்களில் (ப்ராண்ட்'கள்) உணவுப் பொருட்கள் மற்றும் இட்டிலி மாவு போன்றவைகள் தரமாகவும் எல்லோரும் வாங்கிப் பயனடையும் விலைகளிலும் தயாரித்து அளிக்கப்படுகின்றன. எமது மகன் மனு ரஞ்ஜித், தனது கன்னி முயற்சியாக, ''சிகே 'ஸ்'' என்கிற வணிகப்பெயரிலேயே, அடுமனைப் பொருள்கள் தயாரித்து வழங்கும் சங்கிலித்தொடர் விற்பனைக்கூடங்களை உருவாக்கி வெற்றிகரமாய் இயக்கி வருகிறார்.

எமது தாயார் எப்போதும் பெண்களின் நலம், அவர்களின் சுய வேலை வாய்ப்புகள், சமுகப் பொருளாதார முன்னேற்றம், சுதந்திரம், மற்றும் தன்னிறைவு, இவைகளில் மிகுந்த ஈடுபாடும் அக்கறையும் கொண்டிருந்தார். தன் வாழ்நாள் முழுதும் இவற்றிற்காக பல்வேறு முயற்சிகளையும் மேற்கொண்டார்.

இந்த உயர்ந்த நோக்கத்தை மேலும் உயர்த்தும் விதமாக, அவரது பெயரிலேயே, 2020இல், ''ஹேமா எண்டர்ப்ரைஸஸ் பி லிமிடெட்'' என்கிற, முழுவதும் தகுதி மற்றும் அனுபவம் உள்ள– 90 சதவீதம் – பெண்களாலேயே நடத்தப்பெறும், ''வணிகச் செயலாக்க அயலாக்கம்'' (BPO) மற்றும் அறிவுச் செயலாக்க அயலாக்கம்'' (KPO) போன்ற சேவைகளை வழங்கும் ஒரு நிறுவனம் கடலூரில் தொடங்கப் பெற்று, இன்று நேரடியாக 500, மற்றும் மறைமுகமாக 3000க்கும் மேற்பட்ட, பெண்டிருக்கு, வாழ்வாதாரத்தையும் வளர்ச்சியையும் அளிக்கின்றது, என்பது எங்களுக்கு மிகுந்த ஆனந்தத்தைத் தரும் ஒரு நிகழ்வாகும்..

எமது தந்தை திரு சின்னி கிருஷ்ணன் அவர்களின் படைப்புத் திறனைப் போற்றும் வகையில், கவின்கேர் நிறுவனம், ஆண்டுதோறும், ‘‘சின்னிகிருஷ்ணன் பரிசு’’ என்ற பெயரில், நமது நாட்டில் அந்த ஆண்டின் மிகச் சிறந்த புத்தாக்கங்களைத் (innovations) தெரிவு செய்து, இந்த உயரிய விருதை அவர்களுக்கு அளித்துப் பெருமை கொள்கின்றது.

இறுதியாக, என் தாயாரிடமிருந்து நான் கற்ற, எமது எல்லாச் செல்வங்களிலும் மேன்மையான, விலை மதிக்க முடியாத, நான் எப்போதும் பின்பற்றும், இந்த 10 சீரிய சிந்தனைகளை உங்களுடன் பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன். என் வாழ்வில் நான் அடைந்த முன்னேற்றங்களுக்கும், சிறு வெற்றிகளுக்கும் இவையே ஆதாரமாய் அமைந்தன. அவ்விதமே, இவை, உங்கள் வாழ்விலும் வெற்றியையும், முழுமையையும் நல்கும் என்பது என் ஆழ்ந்த நம்பிக்கை.

இதோ அந்த பத்துப் பா.

1. எத்துணை இடர்வரினும், கொடுத்த வாக்கினை நிறைவேற்று.
2. உண்மையே பேசுதல், ஒளிவு மறைவு அற்று இருத்தல், சொல்லிய வண்ணம் செய்தல், இவை மூன்றுமே, அமுதத்திற்கு ஒப்பான – உறக்கம், நிம்மதி, மற்றும் நீங்கா ஆரோக்கியம் – மூன்றையும் என்றும் நல்கும்.
3. ஒருவரின் நற்பண்பே அவரது செல்வங்கள் எல்லாவற்றிலும் தலையானது. மற்ற எல்லா செல்வங்களையும் இழக்க நேரிடினும், ஒருவர், தம் நற்குணங்கள் மற்றும் நன்னடத்தை இவை இரண்டும் பிறழாமல் இருப்பாரேயாயின், அவர் மறுபடியும், தான் இழந்த எல்லா செல்வங்களையும் திரும்பவும் ஈட்டிட முடியும். இது நான் கண்ட வாய்மை.
4. சோதனைகளைக் கண்டு விலகி ஓடாதே, அவற்றை நேருக்கு நேர் நின்று எதிர் கொள். அது ஒன்றே வெற்றிக்கு வழி!
5. உனது நிலைக்கு என்றும் பெற்றோரையும், பிறரையும் குற்றம் சொல்லாதே. உன் வாழ்விற்கு முழுப் பொறுப்பும் உனது என்று கொள், உன் மீது அசையாத நம்பிக்கை வை. வெற்றி நிச்சயம்.

6. கடந்த காலப் பெருமை பேசுபவர், வரும் வாழ்வை சந்திக்கும் துணிவை இழந்தவர்கள் என்பதை அறிந்து கொள் என்றும் உன் பார்வையை எதிர்காலத்தின் மீது வை. துணிவு என்பதே துணையாய், அதனை எதிர்கொள். அது ஒன்றே நல்வினை ஆக்கும்.

7. ஆழ்ந்து, ஆக்கமாய் சிந்தி, பின் அதன்படி செயல்படு. அதுவே முன்னேற்றப் பாதை

8. உன்னைச் சுற்றி உள்ளவர்கள் வெற்றிக்கு வழி செய். அது உன்னை மென்மேலும் உயர்த்தும்.

9. வாழ்நாள் முழுதும் ஒரு மாணவனாகவே இரு. அதுவே வாழ்வின் உன்னதத்தின் இரகசியம்!

10. மன்னித்து விடு. விடுதலை கொள். முன்னேறு!

சி.கே. ரங்கநாதன்

25



அம்மா ஒரு தொடர்கதை

ஹேமாலயம் 3.0. (9.9.2013 - 9.9.2021)

அம்மா மறைந்து 8 ஆண்டுகளுக்கு மேலானாலும் இன்றும் நம்மோடு தான் வாழ்ந்து வருகிறார். வாழ்க்கை என்பது நாம் வாழும் ஆண்டுகளில் இல்லை, மற்றவர் மனதில் வாழும் வரை மட்டுமே. எல்லாருடைய வாழ்க்கையும் வரலாறு ஆவதில்லை. வரலாறு ஆனவர்கள் யாரும் தனக்காக வாழ்ந்ததும் இல்லை. இருந்தாலும் இறந்தாலும் பேர் சொல்ல வேண்டும். இவர்போல் யாரென்று அம்மாவை கடலூரே போற்றி வணங்குகிறது.

அம்மா வாழ்ந்த காலத்தில் ஹேமா இல்லத்தின் மூலவராக வீற்றிருந்து தன்னை நாடி வருவோர்களை உபசரித்து எல்லா உதவிகளையும் செய்தார்.

மறைந்த பின்பும் வீட்டிற்கு வெளியில் சிலையாக, உற்சவராக, ஹேமாலயமாக வருபவர்களுக்கு காட்சிக் "கொடுத்துக் கொண்டிருக்கிறார். அவர் வாழ்ந்த இடமே குடியிருந்த கோயிலாக மாறிவிட்டது.

அன்புத் தந்தை சின்னி கிருஷ்ணன் அவர்களின் உருவ சிலை C.K. பள்ளி வளாகத்தில் இருந்தது. அவரது சிலையையும் அம்மாவின் சிலையோடு ஒன்றாக வீட்டு வளாகத்தில் நிறுவினால் நன்றாக இருக்கும் என்று C.K. – அசோக்குமார் அவர்களின் ஆலோசனை

பேரில் அம்மா அப்பா சிலைகளுக்கு ராஜஸ்தான் மார்பிலில் சிலை வடிப்பதற்கு ஏற்பாடுகளை C.K. ரங்கநாதன் செய்தார்.

“தோப்பு வீடு” என்று அழைக்கப்பட்ட 11 பீச் ரோடுக்கு சொந்தக்காரர்களான டாக்டர் கேப்டன் ரங்கநாதன் அவர்களுக்கும் மனோரஞ்சிதம் அம்மா அவர்களுக்கும் ஹேமா இல்லத்தின் அருகே சிலை அமைக்கப்பட்டது. பிராணப் பிரதிஷ்ட்டை செய்யபட்டு சிலைகள் நேர்த்தியாக நிறுவப்பட்டன.

பள்ளி மாணவர்கள், பெற்றோர்கள், ஆசிரியர்கள் என அம்மாவின் சிலைக்கு மாலை அணிவித்து வழிபடும் காட்சிகள் அன்றாட நிகழ்ச்சியாக இன்றும் இருக்கிறது. ஒவ்வொரு ஆண்டும் அம்மாவின் நினைவு நாளன்று சிலைக்கு மாலை அணிவித்து படையல் சாத்தி அனைவருக்கும் அன்னதானம் வழங்கி பள்ளி உதவித்திட்டங்கள் யாவும் வழக்கமாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

“செத்தும் கொடுத்தான் சீதக்காதி” என்பது பழமொழி ராமநாதபுரத்தில் பிறந்த வள்ளல் பல தமிழ்ப் புலவர்களை பாராட்டி பரிசளித்து வந்தார். கீழக்கரையில் பஞ்சம் ஏற்பட்ட காலங்களில் தமை நாடி வந்த மக்களுக்கு பொருளுதவி செய்தார்.

படிக்காசு தம்பிரான் புலவர் சீதக்காதி அவர்களின் சமாதிக்கு சென்று இனிமேல் எனக்கு யாரிருக்கிறார் என்று அழுதபோது கல்லறை பிளந்துக் கொண்டு கை வெளிப்பட்டதாகவும், கையில் அணிந்த மோதிரத்தை புலவர் பெற்றுக்கொண்டதாகவும் வரலாறு. அதுபோல அம்மா எல்லோருக்கும் உதவி செய்யும் தயாள குணம் படைத்தவர். தன்னுடன் வாழ்ந்த பணியாளர்கள் மீது அன்பும் பரிவும் பாசமும் பொழிந்தார். அப்பலோ மருத்துவமனையில் தன் இறுதிக் காலம் நெருங்கி விட்டது என்கிற நிலையிலும் பணியாளர்களை பற்றியேதான் அவர் சிந்தனை

அதை நினைவு கூர்கையில், டாக்டர் அசோக்குமார் ‘அம்மா என் கையை பிடித்துக்கொண்டு நான் சீக்கிரமாக போய்விடுவேன்’ நம் பணியாளர்கள் ஜெயா, சக்தி, சுலோ, செல்வி, லட்சுமி, மூர்த்தி இவர்களுக்கு எல்லாம் ஏதாவது செய்ய வேண்டும் என்று நினைக்கிறேன். என் பேங்க்ல இருக்கிற 10லட்சம் ரூபாய் பணத்தை எடுத்து இவர்களின் பேரில் நிலம் வீடுகட்டுவதற்கு ஏற்றாற்போல் இடம் வாங்கிக் கொடுக்க வேண்டும் என்று என் கையைப் பிடித்துக் கொண்டு இதை செய்வாயா என்றும் கேட்டார்.

ஒவ்வொருவருக்கும் அவர்களின் பேரில் நிலம் வாங்கி பத்திர பதிவு செய்து கொடுத்துவிட்டேன் என்று பெருமையோடு தெரிவித்தார். ஹேமாலயம் இல்லத்திற்கு அருகில் 'பொம்மக்கொட்டா' என்று அழைக்கப்பட்ட அந்த ஒரு இண்டஸ்டீரியல் ஷெட்டு வளாகம் அம்மா வாழ்ந்தபோது பொம்மை செய்யுமிடமாகவும், கைவினைப் பொருட்கள் செய்யுமிடமாகவும் இருந்தது. பின்பு காயர் (Coir) ஷெட்டு என்ற இடமாக மாறியது. மகளிர்க்கான பல உணவுப்பொருட்கள் தயாரிக்கும் கலாமந்திரமாகவும் மாறியது. அதற்குபின் ராணி ஊறுகாய்பேக்கெட் செய்யும் தொழிற்சாலையாகவும், பின்னர் சின்னிசிக்கி கடலை மிட்டாய் செய்யும் தொழிற்சாலையாகவும் மாறியது. இதைப்போல பல தொழில் நிறுவனங்களை கண்ட அந்த தொழிற்சாலை இன்றைக்கு 400பேர் உட்காரும் ஓர் அரங்கமாக அம்மா நினைவாக ஹேமா ஹால் என்று இன்று பெருமையுடன் நிற்கிறது. இதில் C.K. பள்ளி நிகழ்வுகள் மட்டுமல்லாமல் பொது நிகழ்வுகளும் அவ்வப்பொழுது நடைப்பெற்றுக் கொண்டு வருகிறது.

இன்பமும் துன்பமும் கலந்ததே வாழ்க்கை. அம்மாவின் இளைய சகோதரியான பிரேமலதா தோழியாக அம்மாவுடன் மிக நெருக்கமாக ஒரு தோழியைப் போல அவருடன் பழகி வந்தார்கள். இருவரும் "லூடோ" ஆட்டம் ஆடுவது பேரக்குழந்தைகளுடன் சேர்ந்து தாங்களும் ஆடுவது இவர்களுக்கு அலாதிப்பிரியம். அம்மா சென்ற துயரிலே மூன்று ஆண்டுகளில் அன்புத் தங்கையும் மறைந்தார்.

வளர்ப்பு பிள்ளை போல தன் இளைய சகோதரர் சாந்திகுமாரை டாக்டர் படிக்கவைத்து அழகுபார்த்தவர் ஹேமா அம்மா.

சிறந்த கண் மருத்துவராக மகாராஷ்டிரா மாநிலத்தில் வசித்து வந்தார். அம்மாவின் பிரிவால் வேதனை பட்டவர். அம்மா எனக்கு சகோதரியல்ல அவர் எனக்கு தாயென்று கதறி அழுதவர். அவரும் 2020ல் காலமானார்.

மூத்த சகோதரர் கேசரி ஹனுமந்த ராவ் அவர்கள் தனது 90வது வயதில் ராஜமுந்திரியில் 2021ல் இயற்கை எய்தினார்.

தாய்க்கு தலைமகன் டாக்டர் C.K., ராஜ்குமார் அம்மாவின் அருந்தவப் புதல்வன் தந்தையின் மறைவுக்குப் பிறகு C.K. குடும்பத்தை வழி நடத்தி சென்றார். சகோதரருடன் சேர்ந்து தந்தையார் நிறுவிய இந்தியாவின் சாஷே புரட்சிக்கு வித்திட்டவர். தந்தையை போல ஆராய்ச்சிகள்

பல செய்து உலக விஞ்ஞானிகளுடன் கலந்தாலோசித்து கொரோனா பேரழிவிலிருந்து மக்களை காக்க மருத்துவ உதவி செய்யவேண்டும் என்று தீவிர முயற்சி மேற்கொண்டார். டாக்டர் N O நைட்ரிக் ஆக்ஸைடு உடலில் செலுத்துவது மூலமாக உடலில் இரத்த ஓட்டத்தை பெருக்கி நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்க செய்ய முடியும் என்ற ஆராய்ச்சியில் தன்னையே அர்ப்பணித்துக் கொண்டவர் – தனது 68வது வயதில் அகால மரணமடைந்தது C.K. குடும்பத்தினருக்கு பேரிடியாக விழுந்தது.

சுபநிகழ்ச்சிகள் – இன்பமும் துன்பமும் மாறி மாறி வருவது போல C.K. குடும்பத்தினரின் சுபநிகழ்ச்சியாக C.K. – ரங்கநாதன், தேன்மொழி புதல்வனான மனுரஞ்சித், அக்ஷித்தா இவர்களின் திருமணம் முன்னாள் தமிழக முதல்வர் கலைஞர் கருணாநிதி அவர்களின் தலைமையில் சீரும் சிறப்புமாக நடந்தேறியது.

டாக்டர் ஆண்டாள் பாஸ்கர் புதல்வியான டாக்டர் திவ்யா ரஞ்சிதம் அவர்களுக்கும் டாக்டர் பாலசந்தர் அவர்களுக்கும் ஹேமா இல்லத்தில் நிச்சயிக்கப்பட்டு சென்னையில் 2019–ம் ஆண்டு சிறப்பாக நடந்தேறியது.

பேரிடர் காலத்தில் அம்மா ஒரு அசுர புயலாகவே மாறிவிடுவார்கள். அந்த அளவிற்கு விரைந்து செயல்படுவார்கள். மற்ற தன்னார்வ தொண்டர்களை ஈர்த்து பொது மக்களுக்கு உதவி செய்வதில் அம்மாவுக்கு நிகர் அம்மாவே.

கஜா புயலால் பாதிக்கபட்ட கடலூர் பகுதி மக்களுக்கு C.K.பள்ளி, கல்லூரி சார்பாக பல மருத்துவ வசதி, உணவு வசதி, போக்குவரத்திற்காக பஸ் வசதி அனைத்தும் செய்யப்பட்டது.

விதை ஒன்று விழுந்திட செடி வந்து சேரும் என்று சொல்லவார்கள். அதே போல அம்மாவின் கொள்ளு பேத்தி கைய்ரா பார்ப்பதற்கு அம்மாவை போலவே இருக்கிறார். அவரது முகபாவங்கள், பேசுவதும், கையசைப்பதும் அம்மாவையே உரித்துக் கொண்டு வந்திருக்கிறது என்று எல்லாரும் பார்த்து வியப்படைந்தனர். அம்மாவே மீண்டும் உயிர்ப்பெற்று வந்திருக்கிறார்கள் என எல்லோரும் ஆச்சரியப்படுகிறார்கள்.

தாய் எட்டடி பாய்ந்தால் குட்டி பதினாறு அடி பாயும் என்ற பொன் மொழிக்கு ஏற்ப அன்னையாரின் ஆறு செல்வங்களும் சமூதாயத்தில் கண்ணியமான தலைவர்களாக போற்றப்படுகிறார்கள்.

அடுத்த தலைமுறையினரான பேரப்பிள்ளைகள் முப்பத்திரண்டு அடி பாய்கிறார்கள் என்ற புது மொழிக்கு ஏற்ப உலகளவில்

பேசப்பட்டு தொழில் நுட்பத்திலும் அதைச் செயல்படுத்துவதிலும், தொழிலதிபர்களாகவும் தேர்ந்தெடுத்த அவர்களது துறைகளில் சிறந்து விளங்குகிறார்கள்.

படித்தவர்கள் பண்பாளர்கள் மட்டுமல்ல என்பதற்கு இணங்க

1. ரதி ரஞ்சனி ராஜ்குமார் – Bank Bazaar என்ற நிறுவனத்தை திறம்பட நடத்தி வருகிறார்.

2. கிரிஷிகா ராஜ்குமார் – ஆனாறு (IIBML) கிச்சீஸ் பேக் ஷ டிலைட் என்ற நிறுவனத்தை தொடங்கி தரமான சாக்லேட் மற்றும் கேக்குகளை தயாரித்து வருகிறார்.

3. அர்ஜுன் ராஜ்குமார் – BSC விஸ்காம் Film making மற்றும் ஹார்வேர்ட் பல்கலையில் பட்டமும் பெற்றுள்ளார். தந்தையாரின் தொழிலான "நிவரான்" மற்றும் Velvette நிறுவகித்து வருகிறார்.

4. காயத்ரி ப்ரியா அசோக்குமார் – SRM University ல் பட்டப்படிப்பு முடித்து விட்டு முன்னணி கணினி நிறுவனத்தில் பணியாற்றி வருகிறார்.

5. ராகுல் என்னும் விஷால் அசோக்குமார் – VIT Vellore University CS முடித்து விட்டு மிகச்சிறந்த Business Analyst ஆக E&Yயில் பல தொழில் நிறுவனங்களுக்கு ஆலோசகராக இருக்கிறார்.

6. டாக்டர் திவ்யா பாஸ்கர் – அப்பல்லோவில் கைராசியான மகப்பேறு மருத்துவராக உள்ளார்.

7. அமுதவல்லி ரங்கநாதன் – CK. கல்விக் குழுமங்களின் நிர்வாகியாகவும் மற்றும் Cavin Kare நிறுவனத்தின் Ecommerce நிர்வாகியாகவும் சிறப்பாக செயல்படுகிறார்.

8. மனுரஞ்சித் ரங்கநாதன் CK பேக்கரி மற்றும் Cavin Kare நிறுவனங்களை சிறப்பாக நடத்தி வருகிறார்.

9. தரணி ரங்கநாதன் – ஸ்விட்சர்லாந்தில் படித்து சொந்தமாக பேக்கரி நடத்துகிறார்.

10. அஸ்வினி ரமணிசங்கர் – "கோ பால்" என்னும் பெயரில் A2 நாட்டு மாடுகளின் பால் மற்றும் பால் பொருட்களுடன் இயற்கை வேளாண்மையை செயல்படுத்தியும் அக்ஷரா வித்யாஷ்ரம் பள்ளியையும் அமெரிக்காவிலிருந்து திறம்பட நடத்தி வருகிறார்.

11. பவித்ரா ரமணிசங்கர் – அக்க்ஷராவின் இளவயது CEO. Masters in education technology from Harvard University கல்வியியல் அதைச் சார்ந்த தொழில்நுட்ப பிரிவில் முதுகலைப் பட்டமும் பெற்று, Building anthem back office automation (SAAS) for educational institution ஐ சிறப்பாக நடத்தி வருகிறார்.

12. வைபவ் குமாரவேல் – ரெட்பாக்ஸ் என்னும் சைனீஸ் உணவகத்தை உருவாக்கி நடத்தி வருகிறார். மற்றும் டிஷ்யூம் என்ற பெயரில் உணவு பிராண்டு நடத்தி வருகிறார்.

13. தமயந்தி குமாரவேல் – ஸ்விட்சர்லாந்தில் கல்வியை பெற்று, பேஜ் 3 என்ற அழகு நிலையத்தையும் நம்ம கஃபே என்ற பல்வகையான தேநீர் பானங்களை பிரான்சைஸிங் முறையில் சிறப்பாக நடத்தி வருகிறார்.

சாதனை சோதனை, பெயர் புகழ், உச்சம் நீச்சம், இருள் வெளிச்சம், என்னும் நேர் எதிர்மறைகளைக் கொண்டது வாழ்க்கை. வாழ்வின் நெளிவு சுளிவுகளை புரிந்துக்கொண்டு அவற்றின் தன்னம்பிக்கையுடன் செயல்பட ஹேமாலயம் வழிகாட்டியாக அமைகிறது.

ஹேமா அம்மா மறைந்தாலும் ஹேமாலயம் புத்தகம் வடிவில் அனைவரையும் ஊக்குவித்து வழி நடத்தி சென்றுக் கொண்டிருக்கிறார். அம்மா ஒரு ஆலமரம் ஆணிவேர் அறுந்துவிட்டாலும் விழுதுகள் மரத்தை தாங்கி பிடிக்க கம்பீரமாக நிற்கிறார். பகுத்துண்டு பல்லுயிர் ஓம்பும் ஆலவிருட்சமாக நம்மிடையே வாழ்ந்துவருகிறார்.

அம்மாவின் லட்சியம் பெண்கள் முன்னேற்றம். இதை திரு. சுந்தர் அவர்கள் மேற்பார்வையில் கோவையில் நிகழ்ந்த வலிமையான தமிழகம் என்னும் நிகழ்ச்சியில் கலந்து கொண்ட 555 பெண் தொழில் முனைவோர்களை பாராட்டி “ஹேமாலயம் புத்தகத்தை டாக்டர் CK. அசோக்குமார் அவர்களும் டாக்டர் CK. ஆண்டாள் அவர்களும் இணைந்து அனைவருக்கும் பரிசாக வழங்கினார்கள்.

வாழையடி வாழையாக வளரும் பல தலைமுறை
வாழ்வாங்கு வாழ்க என நாமெல்லாம் வாழ்த்துவோம் பலமுறை
“ஹேமாலயம் ஒரு தொடர்கதை........
அம்மாவின் வெற்றிப்பயணம் தொடரும்.....


Cavins
FRUIT
Milkshake
Fruit, Honey
& Milk.
Cavins
Milkshake
Cavins
Milkshake
Cavins
Milkshake










R.Chinni Krishnan
1931 - 1979
Father of Sachet Revolution
What A Richman Can Enjoy The Common
Man Should Be Able To Afford To
Dr.Hema Chinni Krishnan


Capt. Dr.S.Ranganthan
Time Line : 1908 - 1989
"Akshypatra" Of C.K.FAMILY








WOMEN POWER
TAMILNADU













CK College of Engineering & Technology



CK School

